ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1800/27 - 2013 මාර්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.03.07
*1800/27 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**புடவை உற்பத்தித் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் புடவை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவென அக்கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இம் தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 5.
*2013, மாச்சு 01.*

**அட்டவணை**

புடவை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, *1971*ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் *29* ஆந் திகதிய *14955/ 19* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய *1660/35* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக மாற்றப்பட்டவையுமான முடிபுகள், அட்டவணையின் II ஆம் பகுதிக்காகப் பின்வரும் புதிய பகுதியினைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

*பகுதி II*

**வேலையாளர் வகுப்பு**

**தரம் I (தேர்ச்சியுடையோர்):**

வடிவமைப்போர், செதுக்குநர், புனைவுரு வேலைசெய்வோர் (நெய்தல்), முற்புற அளவாளர்கள், பொருத்துவோர், சிக்கெடுத்தல், விசைச்சட்டம் நூற்றுதல், நெசவிழைத்தல், சுற்றுதல், அளவுபடுத்தல், நெய்தல்.

**தலைமை வேலை செய்வோர்கள்:**

விசைச் சட்டகம் நூற்றல், நெய்தல்.

**வேலை செய்வோர்கள்:**

மெருகூட்டுதல், அளவுபடுத்தல், வாருதல், சிக்கெடுத்தல்.

**நூலிழை வேலை செய்வோர்கள்:**

நெய்தல்

**தரம் II (தேர்ச்சியுடையோர்):**

**தறிக்கட்டைப் பரிசாரகர், வேலைசெய்வோர்கள்:**

குதம், அச்சிடுதல், சாயமூட்டுதல், வெளிறச்செய்தல், இரட்டித்தல், சுற்றுதல், நெசவிழைதல், உள்ளிழுத்தல் அத்துடன் ஊதலறை.

**வேலை உதவியாளர்கள்:**

சிக்கெடுத்தல்

**நூலிழை வேலை செய்வோர்கள்:**

நூற்றல், விசைச் சட்டகம், தகர்ப்போர், நெசவாளர்.

**ஓரளவு தேர்ச்சியுள்ளவர்கள்:**

மூடையாளர் (கட்டுதலும் மூடையாக்குதலும்), சுற்றிக்கட்டுநர், பொதிகட்டுநர், பெட்டிபோடுநர், தச்சர், இரசாயனவியலாளர், குளிரூட்டு பொறி தொகுதியாளர், எண்ணுவோர் - நூல் மூடுவோர், உருளி, கூடைப்பையன்கள் (சுற்றுதல்), வெட்டுநர் அட்டை வெட்டல் மேற்பார்வையாளர்/தலைமை வெட்டல் மேற்பார்வையாளர், கழற்றுநர், இரட்டிப்பாக்குநர், உள்ளிழுக்குநர், மூடையிடுநர், முறுக்கிழை காயவைத்தல், அடுக்கு வரிசையாளர், சாயமூட்டுநர், வேகச்சுழற்றி, அளவிடுநர், நூற்புக்கதிர், பரிசோதகர்கள், முதற்துண்டுத் துணி பொருத்துநர், உதவி அரைப்பாளர்கள், தட்டை அட்டை நீர் பிழிவார்கள், வேலை செய்வோர், சுழற்றுதல், வகை பிரிப்போர், கண்காணிமார், வெள்ளாவி வைக்குநர், எந்திரக் கவனிப்பாளர்கள், குழாயமைப்பு சுற்றுநாடா எந்திரவியலாளர்.

**எந்திரப் பெண்கள்:**

கட்டில் விரிப்பு.

**கார உப்பிடுவோர் கலக்குநர்:**

நிறம், அளவு.

**எட்டுநர், உருட்டுநர், பழுதுபார்ப்போர்:**

வாரும் ஊசி, நீள் பட்டை, தார்முள் மாற்றும் அழுத்துக்கட்டை.

**நூற்புக்கதிர், நெசவுத்தறி நாடா நாக்கு:**

மாதிரி பார்க்குநர், மடிப்புக்கடையிடுநர், திரையாக்குநர், திரையச்சிடுநர், அடுக்குநர் - அட்டை, தையற்காரர், நுனிபொசுக்குநரும் வடிவமைப்பாளரும் அளவாளர்கள் - பின்புறம், அழுத்துக்கட்டை ஆக்குநர், நூற்போர்- நூல் நூற்கும் எந்திரவளையம் மதிப்பிடுதல், தைப்போர், தைப்போர்- நாடா, தையல் பொறி அட்டை, இடையீடு வரைதல், சிம்பலெக்ஸ் கம்பளிப் புரியிழைவாக்கம், கழிவு அட்டை.

**பெருந்தொட்டியாளர் :**

நூற்கழி வெளிறவைத்தல், பருத்தி சாயமூட்டுதல், நூற்கழி சாயமூட்டுதல்

**சுற்றுறையிடுவோர், நெசவாளர் :**

கைத்தறி.

**சுற்றுவோர் :**

தன்னியக்க பேர்ண் சாம்பல் நிறம், நூல்சுற்று கூம்பு, இரட்டிப்பாக்கி, யூனிவர்சல் பேர்ண், சுற்றுறையிடு பையன்கள் (நூற்றல்).

**தேர்ச்சியற்றவர்கள் :**

பின்புற நிரப்புநர், மூடையிடுநர் (குதம்), மூட்டை அடையாளமிடுவோர், மூடையிடுதல் சரிபார்ப்போர், பற்றி நிரப்புநர், காவுநர் - தறிக்கட்டை நூல்வெட்டு, பருத்தி சுழற்றுகை, சுழல் வட்டத்தகடு, கணிப்புப்பலகை.

**துப்பரவாக்குநர்கள் :**

அறை, அழுத்துக்கட்டை துணி குவிப்போர், கூடைப்பையன்கள் (கம்பள விரிப்புப் பிரிவு) வெட்டுநர்- வளையல்.

**மடிப்புகள் சேர்ப்போர், மடிக்குநர் :**

கிறீஸ், கை

**உதவியாளர், தொழிலாளர்கள், எந்திரவியலாளர் :**

பருத்தி விதையகற்றல், பஞ்சு வெட்டும் பொறி கலத்தல், கழுவுதல்.

**இலக்கம் அடையாளமிடுவோர், வேலையாளர்கள், எண்ணெயிடுநர் :**
பொதி செய்வோர்கள், கழிவு எடுப்போர்கள் தகடு இடுவோர்கள்

**தகடு இடுவோர்கள் :**

முன்புறம்/பின்புறம்

**உருளை மூடுநர் உதவியாளர், சிம்பு கழிவு திறப்போர் :**
விதை சேகரிப்போரும் பொதி செய்வோரும்.

**கவ்வுகோல் பழுதுபார்ப்போர் :**
அழுத்துக்கட்டை ஆக்குநர் - உதவியாளர்கள்,

**உதவியாளர்கள் :**

முத்திரையிடுவோரும் பொதிகட்டுவோரும், தைப்போரும்.

**பை- பட்டி :**

உரிப்போர் சணல்கோதுவோர், பெருக்குநர், நூல்பிரித்தெடுப்போர் நிறையிடுவோர்/ தராசு ஆட்கள், பேர்ண் சுற்றுநர் (கம்பளவிரிப்புப் பிரிவு) நூலிழை பதப்படுத்துவோரும் விநியோகிப்போரும்.

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**
**தொழிலாளர் வகுப்பு**

| ஊழிய ஆண்டு | தேர்ச்சி அற்றோர் ரூ. ச. | அரைத் தேர்ச்சி உடையோர் ரூ. ச. | தேர்ச்சி உடையோர் தரம் II ரூ. ச. | தேர்ச்சி உடையோர் தரம் I ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 9,660.00 | 10,080.00 | 10,500.00 | 10,920.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,760.00 | 10,205.00 | 10,650.00 | 11,095.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,860.00 | 10,330.00 | 10,800.00 | 11,270.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,960.00 | 10,455.00 | 10,950.00 | 11,445.00 |
| 5 ஆம் ஆண்டு | 10,060.00 | 10,580.00 | 11,100.00 | 11,620.00 |
| 6 ஆம் ஆண்டு | 10,160.00 | 10,705.00 | 11,250.00 | 11,795.00 |
| 7 ஆம் ஆண்டு | 10,260.00 | 10,830.00 | 11,400.00 | 11,970.00 |
| 8 ஆம் ஆண்டு | 10,360.00 | 10,955.00 | 11,550.00 | 12,145.00 |
| 9 ஆம் ஆண்டு | 10,460.00 | 11,080.00 | 11,700.00 | 12,320.00 |
| 10 ஆம் ஆண்டு | 10,560.00 | 11,205.00 | 11,850.00 | 12,495.00 |

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### மோட்டார் போக்குவரத்துத் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள், அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென என அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இம் தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ ஜே. எல். யூ, விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 05
2013, பெப்புருவரி 19.

### அட்டவணை

மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1947 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிய 9667 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டனவையும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் , அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தின் 6 ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

### பகுதி I

### தொழிலாளர் வகுப்பு

**'ஏ' வகுப்புத் தொழிலாளர் :**

22 பிரயாணிகளுக்கு மேல் ஏற்றுவதற்கு உத்தரவு பெற்ற பேருந்துச் சாரதிகள்.

**'பி' வகுப்புத் தொழிலாளர் :**

22 பிரயாணிகளையும் அதற்குக் குறைந்த தொகைப் பிரயாணிகளையும் ஏற்றுவதற்கு உத்தரவுபெற்ற பேருந்து சாரதிகள், நோயாளர் மோட்டார் வண்டிச் சாரதிகளும், லொறிச் சாரதிகளும், (பெருந்தோட்டம் ஒன்றிற்கு சொந்தமானதாய் அத் தோட்டத்தினுள் மட்டும் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுபவை தவிர) 20 அந்தருக்கு மேற்பட்ட பாரம் ஏற்றும் உத்தரவுபெற்ற லொறிச் சாரதிகளும், வான் சாரதிகளும்.

**'சீ' வகுப்புத் தொழிலாளர் :**

வாடகைக் கார்கள், கெப்கார்களின் சாரதிகள் 20 அந்தருக்குக் குறைந்த பாரம் ஏற்ற உத்தரவுபெற்ற லொறி, வான் சாரதிகள் (பெருந்தோட்டம் ஒன்றிற்குச் சொந்தமானதாய் அத்தோட்டத்தினுள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் லொறிகள் தவிர) வான் சாரதிகள், முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் பிரேதமேற்றும் மோட்டார் வண்டிச் சாரதிகள்.

**'டி' வகுப்புத் தொழிலாளர் :**

பொருட்கள் கொண்டு செல்வதற்கான இழுவை வண்டிகள் கொண்ட இழுபொறிச் சாரதிகள், இழுவை வண்டிகள் கொண்ட லொறிச் சாரதிகள் (சிகாமல் குதிரை வண்டி வகை இழுவை வண்டிகள் கொண்ட லொறிகள் தவிர அல்லது தோட்டத்தினுள் மட்டும் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் இழுபொறிச் சாரதிகள்.)

**'ஈ' வகுப்புத் தொழிலாளர் :**

பெருந்தோட்டங்களுக்குச் சொந்தமானதும் தோட்டத்தினுள் மட்டும் பாவிக்கப்படுவதுமான பின்வரும் வாகனங்களின் சாரதிகள் (அ) லொறிகள், (ஆ) இழுவை வண்டிகள் கொண்ட இழுபொறிச் சாரதிகள்.

**'எவ்' வகுப்புத் தொழிலாளர் :**

நடத்துநர்கள், எழுதுவினைஞர்கள், காசாளர்கள், சீட்டு எழுதுநர்கள், ஆசனப் பதிவு எழுதுவினைஞர்கள் முதலான பேருந்து வண்டியிற் பணியாற்றுவோர்.

**'ஜி' வகுப்புத் தொழிலாளர் :**

20 அந்தருக்கு மேற்பட்ட பாரமேற்ற உத்தரவுபெற்ற லொறிகளின் துப்பரவாக்குநரும் சுமையாட்களும்.

**'எச்' வகுப்புத் தொழிலாளர் :**

20 அந்தருக்கும் அதற்குக் குறையவும் பாரமேற்ற உத்தரவுபெற்ற லொறிகளின் துப்பரவுவாக்குநரும் சுமையாட்களும் பேருந்துகள் வாடகை வண்டிகள், கெப்கார்கள், வான்கள், நோயாளர் வண்டிகள், பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள்.

**'ஐ' வகுப்புத் தொழிலாளர் :**

பேருந்து பரிசோதகர்களும், நேரம் பதியுநரும்.

**'ஜே' வகுப்புத் தொழிலாளர் :**

பேருந்து பரிசோதகர்களும், பஸ் நிலையக் கண்காணிப்பாளரும்.

**'கே' வகுப்புத் தொழிலாளர் :**

மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்ட, மேலே கூறப்பட்டோர் தவிர்ந்த ஏனைய எல்லாத் தொழிலாளர்களும்.

**முன்காட்டப்பட்ட தீர்மானங்கள் :**

(அ) "சுத்திகரிப்போர்" எனப்படுவோர் (எழுதுவினைஞர் வகையை சாராது) லொறிகள், பேருந்துகள், வாடகைக்கார்கள், கெப்கார்கள், வான்கள், நோயாளர் வண்டிகளின் இயந்திர நுணுக்கத்தை பராமரிப்பது தொடர்பில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்கள் ஆவர்.

(ஆ) "சுமையாட்கள்" எனப்படுவோர் லொறிகள் பேருந்துகள், வான்கள், வாடகைக் கார்கள் கெப்கார்கள், நோயாளர் வண்டிகள் அல்லது பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள் ஆகியவற்றில் சுமைகள் ஏற்றி இறக்குவதில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்கள் என்பதுடன் செயற்பாட்டின் போது வாகனங்களின் பிரயாணம் செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்டவர்கள் ஆவர்.

## பகுதி II

**ஆகக் குறைந்த மாதச் சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | வகுப்பு ஏ, டி<br>ரூ. ச | வகுப்பு பி<br>ரூ. ச | வகுப்பு சீ<br>ரூ. ச | வகுப்பு ஈ எவ். ஜே.<br>ரூ. ச | வகுப்பு ஜி. ஐ.<br>ரூ. ச | வகுப்பு எச்<br>ரூ. ச | வகுப்பு கே<br>ரூ. ச |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10.650.00 | 10,275.00 | 9,865.00 | 9,565.00 | 9,225.00 | 8,965.00 | 8,625.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,850.00 | 10,450.00 | 10,015.00 | 9,690.00 | 9,325.00 | 9,065.00 | 8,725.00 |
| 3 ஆம் ஆண்டு | 11,050.00 | 10,625.00 | 10,165.00 | 9,815.00 | 9,425.00 | 9,165.00 | 8,825.00 |
| 4 ஆம் ஆண்டு | 11,250.00 | 10,800.00 | 10,315.00 | 9,940.00 | 9,525.00 | 9,265.00 | 8,925.00 |
| 5 ஆம் ஆண்டு | 11,450.00 | 10,975.00 | 10,465.00 | 10,065.00 | 9,625.00 | 9,365.00 | 9,025.00 |
| 6 ஆம் ஆண்டு | 11,650.00 | 11,150.00 | 10,615.00 | 10,190.00 | 9,725.00 | 9,465.00 | 9,125.00 |
| 7 ஆம் ஆண்டு | 11,850.00 | 11,325.00 | 10,765.00 | 10,315.00 | 9,825.00 | 9,565.00 | 9,225.00 |
| 8 ஆம் ஆண்டு | 12,050.00 | 11,500.00 | 10,915.00 | 10,440.00 | 9,925.00 | 9,665.00 | 9,325.00 |
| 9 ஆம் ஆண்டு | 12,250.00 | 11,675.00 | 11,065.00 | 10,565.00 | 10,025.00 | 9,765.00 | 9,425.00 |
| 10 ஆம் ஆண்டு | 12,450.00 | 11,850.00 | 11,215.00 | 10,690.00 | 10,125.00 | 9,865.00 | 9,525.00 |
| 11 ஆம் ஆண்டு | 12,650.00 | 12,025.00 | 11,365.00 | 10,815.00 | 10,225.00 | 9,965.00 | 9,625.00 |
| 12 ஆம் ஆண்டு | 12,850.00 | 12,200.00 | 11,515.00 | 10,940.00 | 10,325.00 | 10,065.00 | 9,725.00 |
| 13 ஆம் ஆண்டு | 13,050.00 | 12,375.00 | 11,665.00 | 11,065.00 | 10,425.00 | 10,165.00 | 9,825.00 |
| 14 ஆம் ஆண்டு | 13,250.00 | 12,550.00 | 11,815.00 | 11,190.00 | 10,525.00 | 10,265.00 | 9,925.00 |
| 15 ஆம் ஆண்டு | 13,450.00 | 12,725.00 | 11,965.00 | 11,315.00 | 10,625.00 | 10,365.00 | 10,025.00 |

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

## கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழில்

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள்,, 2013ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 5.
2013, பெப்புருவரி 18.

### அட்டவணை

*கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழிலுக்கான சம்பளச் சபையினாலாக்கப்பட்டு 2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதிய 1279/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே கூறப்பட்டுள்ளனவும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டனவும் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக மாற்றப்பட்டனவுமான தீர்மானங்கள் அவ் அட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.*

### *பாகம் II*

### வேலையாளர் வகுப்பு

*கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் வகுப்புக்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நேர வேலைக்காக வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் கீழே விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அளவினதாயமைய வேண்டும்.*

*1. **தேர்ச்சியுடையோர்** :*

*கருங்கல் கையால் உடைப்போர், கருங்கல் இயந்திரத்தாலுடைப்போர், பாறைகளில் வெடிமருந்து நிரப்புவோர், தீயிடுவதன் மூலம் பாறைகளை வெடிக்கச் செய்வோர், பற்றரி மின்சக்தி மூலம் பாறைகளை வெடிக்கச் செய்வோர்.*

*2. **ஓரளவு தேர்ச்சியுடையோர்** :*

*கையால் கற்களைத் துண்டாடுவோர், இயந்திரங்கள் மூலம் பெரிய கற்களை சிறுகற்களாக உடைப்போர், கருங்கற்களை இயந்திரங்கள் மூலம் லொறிகளில் நிரப்புவோர், மெடல் கிரெசர் இயந்திரங்களுக்குக் கருங்கல் துண்டுகளைப் போடுவோர், மெடல் கிரெசர் இயந்திரங்கள் மூலம் கருங்கற்களை பல்வேறு அளவுகளில் உடைப்போர், உடைத்த கருங்கல் துண்டுகளை இயந்திரங்கள் மூலம் அகற்றுவோர், கருங்கற்துண்டுகளை இயந்திரங்கள் மூலம் குவிப்போர், கருங்கற் துண்டுகளை இயந்திரங்கள் மூலம் லொறிகளில் ஏற்றுவோர்.*

*3. **தேர்ச்சியற்றோர்** :*

*சுக்கைக் கற்களைச் சேகரிப்போர், கருங்கற்களைக் கைகளால் லொறிகளில் ஏற்றுவோர், தூள் கருங்கல் துண்டுகளைக் கையால்/சக்கர வண்டியால் அகற்றுவோர், கருங்கற் துண்டுகளைக் குவிப்போர். மேற்கூறப்பட்ட சகல பணிகளுடன் சம்பந்தப்பட்டவர்களும், அதற்குத் தொடர்புடைய பணிகளைச் செய்வோரும்.*

**ஆகக் குறைந்த மாதாந்த சம்பள வீதங்கள்**

| ஊழிய ஆண்டு | தேர்ச்சியுடையோர் | ஓரளவு தேர்ச்சியுடையோர் | பயிற்சியற்றோர் |
|---|---|---|---|
| 1ஆம் ஆண்டு | 12,500.00 | 11,750.00 | 11,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,650.00 | 11,875.00 | 11,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,800.00 | 12,000.00 | 11,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,950.00 | 12,125.00 | 11,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 13,100.00 | 12,250.00 | 11,400.00 |

03- 914/3

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**சுருட்டு உற்பத்தித் தொழில் தொடர்பான சம்பளச் சபை**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுருட்டு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இவ்வறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான தீர்மானங்கள் கௌரவ தொழில், உறவுகள், அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே.எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 5,
2013, பெப்புருவரி 18.

**அட்டவணை**

சுருட்டு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1946 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதியன்று வெளிவந்த 9585 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறாக 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 அந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் அவ்வட்டவணையில் I ஆம் பாகத்தில் ஏற்கனவேயுள்ள பாகத்திற்கு பதிலாக பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம் மேலும் வேறுப்படுத்தப்படுதல் வேண்டும்.

**பாகம் I**

**துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

சுருட்டு சுற்றுவதற்கு (உட்புகையிலையைச் சுத்தம் செய்தல், சுற்றுதற்குக் காப்பிலையைத் தயார் செய்தல், துண்டுப் புகையிலையை நிரப்புதலுடன் சுற்றுதற்கு உட்புகையிலையைத் தயார் செய்தல், சுற்றிய சுருட்டுக்களை நூலினாற் கட்டுதல், பத்துச் சுருட்டுக்கள் கொண்ட கட்டுகளாகச் சுருட்டுக்களைக் கட்டுதல் ஆகியன உட்பட) துண்டு வேலைக்குரிய (திரட்டிய) ஆகக்குறைந்த கூலி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

1000 சுருட்டுகளுக்கு - 595 ரூபா

3- 914/4

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### தீப்பெட்டி உற்பத்தித் தொழில்

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இவ்வறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளவாறான தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள், 2013ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 5.
*2013, பெப்புருவரி 18.*

### அட்டவணை

*தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1947ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிய 9708ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ஆம் நிரலுக்கு புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

### *II* ஆம் பாகம்

### நேரவேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதம்

I ஆம் நிரலிற் குறிக்கப்பட்டுள்ள தொழிலாளருக்கு இயைபுடைய சாதாரண வேலைநாளுக்குரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம், II ஆம் நிரலில் அந்தந்த தரத்திற்கு நேரே குறிக்கப்பட்டுள்ள வீத அளவினதாக இருத்தல் வேண்டும் :-

| *I ஆம் நிரல்*<br>*தொழிலாளர் வகுப்பு* | *II ஆம் நிரல்*<br>*நாளுக்குரிய வீதம்* |
|---|---|
| I **ஆம் தரம்**: | *ரூ. ச.* |
| *மெஷின் டிரைவரால் சிராய்த் தகடுகள் வெட்டுதல், மெஷின் டிரைவரால் சிராய்த் தகடுகளை உரித்தல், விளிம்புகள், வெளிப்பெட்டிகள் அருகுகள், கீழ்ப்புற அருகுகள் ஆகியவற்றை வெட்டுதல், மெஷின் டிரைவரால் கத்திகளையும் ஆயுதங்களையும் தீட்டுதல், மெஷின் டிரைவரால் சட்டங்களை குச்சால் நிரப்புதல் மெஷின் டிரைவரால் இரசாயன சேர்க்கையில் குச்சிகளைத் தோய்த்தல், மெஷின் டிரைவரால் ஓரங்களுக்கு மருந்து பூசுதல், நெருப்புக் குச்சி நுனிக்குப் பூசும் மருந்து கலத்தல், மெஷின் டிரைவரால் கடதாசிகளை நாடாக்களாக வெட்டுதல், ஓவசியரின் அல்லது கங்காணியின் வேலை, மெஷின் டிரைவரால் பெட்டி நிரப்புதல்.* | *380.00* |
| II **ஆம் தரம்**: | |
| *கையால் குறுக்கே துண்டுதுண்டுகளாக வெட்டுதல், மெஷின் டிரைவரால் குறுக்கே துண்டு துண்டுகளாக வெட்டுதல், தகடுகள் மட்டுப்படுத்தல், வெட்டுக்கருவியால் வெளிப்பெட்டி அருகுகள், விளிம்புகள், கீழ்ப்புற அருகுகள் ஆகியவற்றை வெட்டுதல், மெஷினால் உட்பெட்டி* | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்*<br>*தொழிலாளர் வகுப்பு* | *II ஆம் நிரல்*<br>*நாளுக்குரிய வீதம்*<br>*ரூ. ச.* |
|---|---|
| II **ஆம் தரம்**: | |
| செய்தல், உதவி செய்பவரால் மெஷினை உபயோகித்துக் கத்திகளையும் ஆயுதங்களையும் தீட்டுதல், கையால் வெண் மெழுகு பூசுதல், சட்டங்களிலிருந்து குச்சிகளைக் காலியாக்குதல், பெட்டியின் ஓரங்களுக்கு மருந்து பூசுதல், நிரப்பிய பெட்டிகளைச் சரிபார்த்தல், மெஷின் டிரைவரால் கடுதாசி நாடா இடுதல், பெட்டிகளின் ஓரங்களுக்குப் பூசுவதற்கு மருந்து கலத்தல், மெஷினால் வெளிப்பெட்டி செய்தல், பெட்டிகளை நிரப்புவதற்கு மெஷினால் பெட்டிகளை எடுத்துதவுதல், கையால் இரசாயன சேர்க்கையில் குச்சிகளைத் தோய்த்தல். | 365.00 |
| III **ஆம் தரம்**: | |
| மேலே I ஆம் அல்லது II ஆம் தரங்களிற் குறிக்கப்படாத காவற்காரரின் வேலை தவிர்ந்த (தீப்பெட்டித் தொழிலிலுள்ள) தொழிலாளர் யாவரினதும் வேலை. | 350.00 |
| IV **ஆம் தரம்**: | |
| காவற்காரரின் வேலை. | 380.00 |

*03- 914/5*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**பத்திரிகையாளர் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் பத்திரிகையாளர் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இவ்வறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளவாறான தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அச்சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள், 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள், அமைச்சு.

கொழும்பு 05,
*2013, மாச்சு 01.*

**அட்டவணை**

பத்திரிகையாளர் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1986 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதிய 411/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி** ii

**வேலையாளர்களின் வகை**

**விசேட தரம் :-** *பிரதி பத்திரிகை ஆசிரியர், இணை பத்திரிகை ஆசிரியர், விசேட தரப்பத்திரிகை ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர் (நாளாந்தம்).*

*தரம்* I *வியாபாரப் பதிப்பாசிரியர், பிரதான உப பதிப்பாசிரியர், எழுத்தாளர் தலைவர், வெளிநாட்டுச் செய்திப்பதிப்பாசிரியர், தனிச்சிறப்பு கூறு பதிப்பாசிரியர், உள்ளூர் செய்திப்பதிப்பாசிரியர்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**தரம் :** II உதவிப் பதிப்பாசிரியர், பிரதான புகைப்படப்பிடிப்பாளர் பிரதி எழுத்தாளர், தலைவர், தனிச் சிறப்புக் கூறு எழுத்தாளர், ஆசிரியர் தலையங்க உதவியாளர், நூலக உப பதிப்பாசிரியர், கேலிச் சித்திரக்காரர், மொழிபெயர்ப்பாளர், சிரேட்ட புகைப்படப்பிடிப்பாளர், சித்திரம் வரைவோர்.

**தரம் :** III நூலக உதவியாளர் செய்தி அறிக்கையாளர், புகைப்படப்பிடிப்பாளர், கனிஷ்ட உபபதிப்பாளர், ஒப்புநோக்குநர்

***மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்***

| ஊழிய ஆண்டு | விசேட தரம் ரூ. ச | தரம் I ரூ. ச | தரம் II ரூ. ச | தரம் III ரூ. ச |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 19,580.00 | 16,070.00 | 15,055.00 | 14.235.00 |
| 2 ஆம் ஆண்டு | 19,930.00 | 16,370.00 | 15,305.00 | 14,435.00 |
| 3 ஆம் ஆண்டு | 20,280.00 | 16,670.00 | 15,555.00 | 14,635.00 |
| 4 ஆம் ஆண்டு | 20,630.00 | 16,970.00 | 15,805.00 | 14,835.00 |
| 5 ஆம் ஆண்டு | 20,980.00 | 17,270.00 | 16,055.00 | 15,035.00 |
| 6 ஆம் ஆண்டு | 21,330.00 | 17,570.00 | 16,305.00 | 15,235.00 |
| 7 ஆம் ஆண்டு | 21,680.00 | 17,870.00 | 16,555.00 | 15,435.00 |
| 8 ஆம் ஆண்டு | 22,030.00 | 18,170.00 | 16,805.00 | 15,635.00 |
| 9 ஆம் ஆண்டு | 22,380.00 | 18,470.00 | 17,055.00 | 15,835.00 |
| 10 ஆம் ஆண்டு | 22,730.00 | 18,770.00 | 17,305.00 | 16.035.00 |
| 11 ஆம் ஆண்டு | | 19,070.00 | 17,555.00 | 16,235.00 |
| 12 ஆம் ஆண்டு | | 19,370.00 | 17,805.00 | 16,435.00 |
| 13 ஆம் ஆண்டு | | 19,670.00 | 18,055.00 | 16,635.00 |
| 14 ஆம் ஆண்டு | | 19,970.00 | 18,305.00 | 16,835.00 |
| 15 ஆம் ஆண்டு | | 20,270.00 | 18,555.00 | 17,035.00 |

தரம் III இல் உள்ள பயிலுநர் - 1 ஆம் ஆண்டு ரூபா 9, 460.00

3- 914/6

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**மேசு வகை உற்பத்தித் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் மேசு வகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள், அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜேவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சு,
கொழும்பு 05,
2013, மாச்சு 01.

## அட்டவணை

மேசுவகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 14725 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவையுமான தீர்மானங்கள் அட்டவணையில் II ஆம் பகுதிக்கு பதிலாக பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

### *பகுதி II*

### ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பளம்

**தொழிலாளர் வகுப்பு** :

**தரம்** I : பிரதான வேலையாளர் அல்லது தலைவர்கள் பிரிவு மேற்பார்வையாளர் படனம் அடுக்கும் இயந்திரம் இயக்குவோர்.

**தரம்** II : வெள்ளாவித் தொட்டி இயக்குவோர், நீராவிக்கொதிகலமியக்குவோர், கழுவு இயந்திரம் இயக்குவோர், நிறமூட்டும் இயந்திரம் இயக்குவோர், நீரகற்றும் இயந்திரம் இயக்குவோர், மெருகிடும் இயந்திரம் இயக்குவோர், உலர்த்தும் இயந்திரம் இயக்குவோர், இயந்திரம் திருத்துவோர் நுட்பவியலாளர் (பொது நோக்கு) சாயமூட்டுவோர் (ஆண்கள்) பின்னும் இயந்திரம் திருத்துவோர்கள், திரை அச்சிடுவோர், திரை அச்சிடுபொறி வேலையாளர் (பெண்கள்) திரை அச்சீட்டு உதவியாளர், தையல் இயந்திரம் திருத்துவோர்.

**தரம்** III : சீத்தை படலம் இயக்குவோர் (பெண்கள்) வெட்டும் இயந்திரம் இயக்குவோர், மின்சக்தியால் வெட்டும் இயந்திரம் இயக்குவோர் (கையினால்) வெட்டுவோர், தையல் இயந்திரம் இயக்குவோர், சீத்தை கொதிக்கவைக்கும் தொழிலாளர்கள், வெளிறச் செய்யும் வேலையாளர்கள் (ஆண்கள்) பின்னல் இயந்திரம் இயக்குவோர், சீர்ப்படுத்தும் வேலையாளர்கள் (பெண்கள்) நேர்த்தியாக்கும் வேலையாளர்கள் (பெண்கள்) இஸ்திரிகை போடுவோர் (ஆண்கள்) மின்சக்தியால் இஸ்திரிகை போடுவோர் சரிபார்ப்போர் (பெண்கள்) வகைப்படுத்துவோர் (பெண்கள்) கட்டாக்குவோர், கட்டாக்கி முத்திரை அச்சிடுவோர் (பெண்கள்) சப்பாத்து நாடா, பின்னல் கயிறு, பின்னல் நாடா இயந்திரம் இயக்குவோர், செலபேன்பைகளும் அட்டைப்பெட்டிகளும் செய்வோர், சுற்றுமியந்திரம் இயக்குவோர்.

**தரம்** IV : தொழிலைக் கற்போர் அல்லது பயிலுநர் (மேலே குறிக்கப்பட்ட எவராயினும் ஒரு தொழிலைக் கற்போர் அல்லது பயிலுநர் சம்பந்தப்பட்ட வரையில் வேலை பழகும் காலம் 156 வேலை நாட்களைக் கொண்டதாகக் கருதப்படுதல் வேண்டும்).

*மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதங்கள்*

| ஊழிய ஆண்டு | தரம் I ரூ. ச | தரம் II ரூ. ச | தரம் III ரூ. ச | தரம் IV ரூ. ச |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 9,750.00 | 9,360.00 | 8,970.00 | 5,635.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,900.00 | 9,485.00 | 9,070.00 | |
| 3 ஆம் ஆண்டு | 10,050.00 | 9,610.00 | 9,170.00 | |
| 4 ஆம் ஆண்டு | 10,200.00 | 9,735.00 | 9,270.00 | |
| 5 ஆம் ஆண்டு | 10,350.00 | 9,860.00 | 9,370.00 | |

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**ஆதுலர் மனைத் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள், அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 5,
*2012, மாச்சு 01.*

**அட்டவணை**

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1974 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதிய 104 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்கு பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பாகம் II**

**வேலையாளரின் வகுப்பு**

**தரம்** I

தலைமைத் தாதி, அப்பொதிக்கரிமார்

**தரம்** II

வாகடகர், தாதிச் சகோதரி, ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர் :

**தரம்** III

(அ) தாதிமார், மருத்துவிச்சிமார், களஞ்சியக்காப்பாளர்
(ஆ) பயிற்சி பெறும் தாதிமார் : பயிற்சியின் 1 ஆம் ஆண்டு
பயிற்சியின் 2 ஆம் ஆண்டு
பயிற்சியின் 3 ஆம் ஆண்டு

**தரம்** IV

எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், வரவேற்பாளர்கள், தொலை பேசி இயக்குநர்கள், காசாளர்கள்.

**தரம்** V

கவனிப்பாளர்கள், மருந்தகர்கள், அறுவை மருத்துவ மருந்துகட்டுநர்கள், உணவு மேலாளர், மேற்பார்வையாளர்கள், வாட்டு எழுதுவினைஞர்கள், உணவு பட்டியல் எழுதுவினைஞர்கள்

**தரம்** VI

ஓடலிமார், பியோன்மார், சமையற்காரர்கள், காவலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள்.

**தரம்** VII

துணியறைக் கவனிப்பாளர்கள், தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், பெருக்குநர்கள், சாப்பாட்டறைப் பையன்கள்.

'ஆண்டு' என்பது எவரேனும் பயிற்சி பெறும் தாதி தொடர்பாக, பன்னிரண்டு மாதங்கள் தொழிலில் ஈடுபடுத்தல் எனக் கருதப்படல் வேண்டும்.

***மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்***

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III (அ)<br>ரூ. ச. | தரம் IV (ஆ)<br>ரூ. ச. | தரம் V<br>ரூ. ச. | தரம் VI<br>ரூ. ச. | தரம் VII<br>ரூ. ச. | தரம் VIII<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 11,175.00 | 10,935.00 | 10,530.00 | 6,620.00 | 10,205.00 | 9,880.00 | 9,560.00 | 9,315.00 |
| 2 ஆம் ஆண்டு | 11,425.00 | 11,160.00 | 10,730.00 | 6,770.00 | 10.380.00 | 10,030.00 | 9,685.00 | 9,415.00 |
| 3 ஆம் ஆண்டு | 11,675,00 | 11,385,00 | 10,930.00 | 6,920.00 | 10,555.00 | 10,180.00 | 9,810.00 | 9,515.00 |
| 4 ஆம் ஆண்டு | 11,925.00 | 11,610.00 | 11,130.00 | | 10,730.00 | 10,330.00 | 9,935.00 | 9,615.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,175,00 | 11,835.00 | 11,330.00 | | 10,905.00 | 10,480.00 | 10,060.00 | 9,715.00 |
| 6 ஆம் ஆண்டு | 12,425,00 | 12,060.00 | 11,530.00 | | 11,080.00 | 10,630.00 | 10,185.00 | 9,815.00 |
| 7 ஆம் ஆண்டு | 12,675.00 | 12,285.00 | 11,730.00 | | 11,255.00 | 10,780.00 | 10,310.00 | 9,915.00 |
| 8 ஆம் ஆண்டு | 12,925.00 | 12,510.00 | 11,930.00 | | 11,430.00 | 10,930.00 | 10,435.00 | 10,015.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,175.00 | 12,735.00 | 12,130.00 | | 11,605.00 | 11,080.00 | 10,560.00 | 10,115.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,425.00 | 12,960.00 | 12,330.00 | | 11,780.00 | 11,230.00 | 10,685.00 | 10,215.00 |

*3- 914/8*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தி தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. வீஜேயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சு,
கொழும்பு 5.
2013, மாச்சு 01.

***அட்டவணை***

*தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட, 1970ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 28 ஆந் திகதிய 14921 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கான அட்டவணையிற் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணைக்கு பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

***பாகம் II***

*தோல்பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் தொழிலாளர் வகுப்புக்களுக்குரிய ஊழியர்களுக்கான நேர வேலைக்குரிய ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பள அளவு கீழ்க்காணும் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.*

**தொழிலாளர் வகுப்பு**

*தோல் பதனிடுதல் :*

***தரம் I***

*பதனிடா உரிவையைக் கழுவுதல், உரிவையைச் சுண்ணாம்பில் கொதிக்கவைத்தல், சருமத்திலிருந்து மயிரை அகற்றுதல், சருமத்திலிருந்து சதையை அகற்றுதல், இரசாயனப் பொருட்களிடல், வெளிறச் செய்தல், மென்மையாக்கல், ஊறவைத்தல், உப்பிடல், மேல்மிச்சமான எண்ணெய்யை அகற்றுதல்.*

***தரம் II***

*பிரித்தல், சிவிறுதல், உப்பிட்ட தோல்களை அடுக்குதல், தோலை நேர்த்தியாக்குதலும் தெரிவுசெய்தலும் தரப்படுத்தலும் சேர்வையில் தோய்த்தல், எந்திரங்களை இயக்குதல், சுருக்கு நீக்கி அழுத்தமாக்குதல்.*

***தரம் III***

*மா இட்டுக் காயவைத்தல், பதனிடா உரிவையைப் பதப்படுத்தல், துப்புறவு செய்வோர், கட்டுவோர் ஆகியோரின் வேலை, மேலே குறிப்பிடப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நிகழும் மற்றும் யாதாயினும் வேலை.*

*பாதணி உற்பத்தியும் பழுதுபார்த்தலும் :*

***தரம் I***

*சேர்த்தல், மேற்தோல் செய்தல், புடவை ஒட்டுதல், எந்திரவேலை, மேற்தோல் வெட்டுதல், விளிம்பை நேர்த்தியாக்குதல், அச்சில் மேற்தோல் ஒட்டுதல், அடிப்பாகங்களை அழுத்துதல், குதி செய்தல், குதி அமுக்குதல், மேற்தோல்களின் பாகங்களை வெட்டுதல், விளிம்பு அமைத்தல், அடித்தோல் வெட்டுதல்.*

***தரம் II***

*ஏற்றுதல், சப்பாத்து அழுத்துதல், மேற்தோல் செய்தல், கச்சு அமைப்பதற்கு துவாரமிடல், தறைதல், வார்ப்பூட்டு இணைத்தல், அடித்தோல் தைத்தல், அடித்தோலை மென்மையாக்கல், மேலதிகப் பாகங்களை அகற்றுதல், கரைசல் தயாரித்தல், மேற்தோலின் முன்புறத்தை அமைத்தல், கல்லறைகளை அமைத்தல்.*

***தரம் III***

*இறப்பர் சேர்வை கலத்தல், கச்சு வெட்டுதல், மேற்தோலைத் தறைதல், சேர்வையில் தோய்த்தல், மேற்தோல் இடல், மேற்தோல் தயாரித்தல், பின் தையலுக்குச் சேர்வை பூசுதல், மினுக்குதல், செய்துமுடித்தல், பெட்டிகள் வழங்கல், பெட்டிகளுக்கு முத்திரையிடல், பெட்டிகளுக்கு நாமவிலாசமிடல், துப்புரவு செய்வோர், கூட்டுவோர் ஆகியோரின் வேலை, மேலே குறிப்பிடப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நிகழும் மற்றும் வேலை யாதாயினும்*

*தோற்பொருட்கள் உற்பத்தி செய்தல்*

***தரம் I***

*இயந்திரத்தினாலும் கையாலும் மேற்தோல்களின் பாகங்களை வெட்டுதல், துளையிடலும் பிளவு ஆக்கலும், தறைதல், கையால்*

அமுக்குதல், காற்பந்துகள், கைப்பந்துகள், வலைப்பந்துகள் செய்தல், பயணப் பைகள், சாதாரண உறைகள், பணப் பைகள் செய்தல் (கையால்)

**தரம்** II

தெறிகள், வார்ப்பூட்டுகள், பொத்தான்கள் அமைத்தல், சித்தரித்தல், பூட்டுக்கள், இணைப்புக்கள், கைப்பிடிகள் அமைத்தல், தைத்தல், பயணப் பைகள் செய்தல் (இயந்திரத்தால்)

**தரம்** III

அடையாளமிடல், சேர்வையும் பசையுமிடல், காற்றுச் செலுத்துதலும் முத்திரையிடலும், மேலே குறிக்கப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது வேலையின்போது நிகழும் மற்றும் வேலை யாதாயினும்

*தொழில் பயிலுநர் அல்லது பயிற்சியாளர்*

மேலே கூறப்பட்ட பயிற்சியாளர் அல்லது பயிலுநர் எவரேனும் தொடர்பான பயிற்சிக் காலம் 156 வேலை நாட்களைக் கொண்ட காலப் பகுதியாக அமையுமெனக் கருதப்படல் வேண்டும்.

**விளக்க அட்டவணை**

***ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்***

| ஊழிய ஆண்டு | தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழில் | | | |
|---|---|---|---|---|
| | தரம் I | தரம் II | தரம் III | தொழில் பயிலுநர் அல்லது பயிற்சியாளர் |
| 1 ஆம் ஆண்டு | 10,500.00 | 10,080.00 | 9,660.00 | 5,820.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,650.00 | 10,205.00 | 9,760.00 | |
| 3 ஆம் ஆண்டு | 10,800.00 | 10,330.00 | 9,860.00 | |
| 4 ஆம் ஆண்டு | 10,950.00 | 10,455.00 | 9,960.00 | |
| 5 ஆம் ஆண்டு | 11,100.00 | 10,580.00 | 10,060.00 | |

3- 914/9

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.